முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1457

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.09.2023**, திங்கட்கிழமை

1. தவசித்தி விழாகொண்ட தேசிகனே
தவசித்தி பூர்த்திகொண்ட நாயகனே
அவதாரம் என் சக்தி சூட்சுமமாக
அரங்கேற்றம் கலியினில் கண்டு இனிதே
2. இனிதே அற்புதம் நடத்துகின்ற
இணையில்லா ஞான தேசிகனே
கனிவேலவன் யான் உந்தனுக்கு
கருணைகொண்டு ஞான அறிவுரை ஆசி
3. ஆசிதனை சோபகிருது நங்கை திங்கள்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 08ம் நாள், 25.09.2023, திங்கட்கிழமை)
அரங்கனுக்கு சிறப்புற எடுத்துரைப்பேன்
வாசிவென்ற ஞானியர்கள் துணையோடு
வல்லமைபட அறத்தை செய்துகொண்டு
4. செய்துகொண்டு கலியுக மக்களை
சித்திமிகு ஞானவான்களாக மாற்ற
ஐயமற சரவணச்சுடரேற்றி
அற்புதத்தை நடத்துகின்ற அரங்கனே
5. அரங்கனே உந்தனுள் யானிருந்து
அகிலத்தை காத்துவருகின்றேன்
அரங்கனே உந்தனுள் யானிருந்து
அகிலமெங்கும் அற்புதம் நடத்துகின்றேன்
6. நடத்துகின்றேன் சன்மார்க்க நெறிகொண்டு
நானிலத்தில் சன்மார்க்க உயர் தொண்டர்களை
தடையின்றி உன்வழி சீடர்களாக
தரணியெங்கும் ஞானப்படைகளாக

7. ஆகவே உருவாக்கி அகிலமெங்கும்
அற்புதத்தை நாளும் நடத்துகின்றேன்
வகைபட அரங்கன் நீ கண்ட இவ்விழாநாளில்
வல்லமைபட ஆறுமுகன் சூட்சுமமாய்
8. அரங்கத்தில் கூடிய அன்பர்கள் அனைவருக்கும்
சூட்சும தீட்சை வழங்கினேன்
வழங்கியே உலகோர்க்கு வல்லமை கூடிட
வரமாக இந்த நன்னாளில் அற்புதம் நடத்தினேன்
9. ஆகவே அரங்கன் நீ இனி வருகின்ற மக்களுக்கு
அறிவிப்பேன் ஆசிதந்தால் போதும்
பெருமைபட அவர்கட்கெல்லாம் வினை நீங்கி
பிறவாத பெரும்பேறு உறுதியாகும்
10. உறுதிகொண்டு இன்னும் சக்தியை
உகந்த இன்னாளில் இன்னும் ஏற்றியுள்ளேன்
உள்ளபடி அரங்கன் தொடர்பு கொண்டால்
உலகோர்க்கு சித்தி உறுதிஉறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—